ஆண்டறிக்கை
2010 - 2011

LLTL

லங்கா லொஜிஸ்ரிக்ஸ் அன்ட் ரெக்னொலொஜிஸ் லிமிரெட்

ஆண்டறிக்கை

2010 / 2011

லங்கா லொஜிஸ்ரிக்ஸ் அன்ட் ரெக்னொலொஜிஸ் லிமிரெட்

உள்ளடக்கம் **பக்கம்**

நோக்கும் அரும்பணியும்	03
கூட்டாண்மைத் தோற்றப்பாடு	06
பாதுகாப்பு அமைச்சு செயலாளரின் செய்தி	07
தவிசாளரின் மீளாய்வு	08
பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு	09
சிரேட்ட முகாமைத்துவம்	12
நிதிசார் முனையம்சங்கள்	13
பணிப்பாளர் சபை	14
பணிப்பாளர்களின் அறிக்கை	14
கூட்டாண்மை ஆளுகைக்கூற்று	18
கணக்காய்வுக் குழவின் அறிக்கை	18
நிதிசார் அறிக்கைகள் மீதான பணிப்பாளர்களின் பொறுப்புகள்	20

நோக்கும் அரும்பணியும்

நோக்கு

- கொள்வனவு – வழங்கல் மற்றும் கருத்திட்டங்களுக்காக முன்மாதிரியான வசதிகளை வழங்குவதன் ஊடாக தேசிய பாதுகாப்பினைப் பலப்படுத்துதல்

அரும்பணி

- வெளிவாரி இரகசியத்தன்மையையும் உள்ளக வெளிப்படைத் தன்மையையும் பேணி இலங்கை ஆயுதப்படையினர், பொலீசார் மற்றும் அரசாங்கத்துக்கு சொந்தமான ஏனைய நிறுவனங்களுக்கான வரையறுக்கப்பட்டதும் மூலோபாய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்ததுமான இராணுவ உபகரணங்கள் மற்றும் சேவை வழங்களுக்கான வசதிகளை அளித்தல்.
- சுதேச பாதுகாப்புக் கைத்தொழிலின் ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்திக்கு உதவுதலும் மேம்படுத்தலும்
- தேசிய பாதுகாப்பு தொடர்பில் தாக்கமேற்படுத்துகின்ற கருத்திட்டங்களை தொடங்குதல் / மேற்கொள்ளப் பொறுப்பேற்றல் / முகாமை செய்தல்

கம்பெனித் தோற்றப்பாடுகள்

பாதுகாப்பு அமைச்சின் விடயப்பரப்பின் கீழுள்ள நிறுவனங்களுக்கு இராணுவ ரீதியான பண்டங்களையும் சேவைகளையும் கொள்வனவு வழங்கல் வசதிகளை வழங்கும் நோக்கத்துடன் தாபிக்கப்பட்ட லங்கா லொஜிஸ்ரிக்ஸ் அன்ட் ரெக்னொலொஜிஸ் லிமிரெட் இலங்கை அரசாங்கத்திற்கு பூரண உரிமையுள்ள நிறுவனமாகும். அதிமேதகு சனாதிபதி யவர்களினதும் பாதுகாப்பு அமைச்சு செயலாளரினதும் தூரநோக்கின் பெறுபேறாக தேசிய பாதுகாப்பு கொள்வனவு வழங்கல் நடவடிக்கைகளுக்காக வசதிகளை வழங்கும் பொருட்டு முழுமையாகவே அரசாங்கத்திற்குச் சொந்தமான அமைப்பாண்மை ஒன்றினை தாபிக்கும் அவசியப்பாட்டின் பேரில் இக்கம்பெனி தாபிக்கப்பட்டது. அதன்விளைவாக 2006 மார்ச் 29 ஆம் திகதிய (தொடர்பு :06/0650/206/025) அமைச்சரவை நிருபத்தின் பிரகாரம் 2006 செப்ரெம்பர் 04 ஆம் திகதி கூட்டிணைக்கப்பட்டதோடு 2007 இன் 07 ஆம் இலக்கமுடைய கம்பெனிகள் சட்டத்தின் கீழ் 2010 செப்ரெம்பர் 01 ஆம் திகதி மீள்வதிவு செய்யப்பட்டது.

- தற்போது கம்பெனியின் விடயப்பரப்பு இராணுவம்சார் பண்டங்களுக்கான வசதிகளை வழங்குவதற்கு அப்பால் சென்று தேசிய பாதுகாப்பு நாட்டத்துடனான பாதுகாப்பு சார்ந்த கருத்திட்டங்கள் வரை கம்பெனியின் நடவடிக்கைகள் விரிவடைந்துள்ளன. இவ்வாறு மேற்கொள்ளப்படுகின்ற கருத்திட்டங்கள் பிரதானமாக மூன்று பகுதிகளாக வகுக்கப்படும்.
- சுதேச பாதுகாப்பு தொடர்பான தொழில்துறையினை முன்னேற்றுவதற்கான அரசாங்க கருத்திட்டங்கள் (ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி நிலையம் ஊடாக விருத்தி செய்யப்பட்ட உற்பத்திகள்)
- தேசிய பாதுகாப்பு நாட்டமுடைய கருத்திட்டங்கள் (லங்கா லொஜிஸ்ரிக்ஸ் அன்ட் ரெக்னொலொஜிஸ் லிமிரெட் ஊடாக)
- சிவில் கருத்திட்டங்களுக்கான அரச தனியார்துறை பங்காண்மை

மேற்படி பகுதிகளின் கீழ் லங்கா லொஜிஸ்ரிக்ஸ் அன்ட் ரெக்னொலொஜிஸ் லிமிரெட் திட்டங்களை ஆரம்பித்த பிரதான கருத்திட்டங்கள்

- தேசிய பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்புப் பதவியணித் தலைமையகம் மற்றும் பாதுகாப்புப் படைத்தலைமையக மீள் நிறுவுகை
- தேசிய ஆட்பதிவேடுகள் மற்றும் இலத்திரனியல் தேசிய அடையான அட்டடை
- பொலிஸ் தலைமையகத் தொகுதி மீள்நிறுவுகை
- இராணுவத் தரத்தைச் சேர்ந்த பாதணி தயாரிப்புத் தொழிற்சாலையை நிறுவுதல்
- இரட்டைத் தலைநகர அபிவிருத்தி செய்தல்

- வடக்கு மற்றும் கிழக்கிற்கான ஊடுகடத்தும் கோபுர வலையமைப்பு
- வணிகம்சார் வெடிமருந்து ஆலையொன்றினை இலங்கையில் நிறுவுதல்
- சிறிய சுடுபடைக்கலன்களையும் தோட்டாக்களையும் உற்பத்தி செய்யும் ஆலையொன்றை நிறுவுதல்
- இலங்கை பாதுகாப்பு படையினருக்காக சுகாதாரப் பாதுகாப்பினை மையப்படுத்தல்
- இலங்கையில் விமானக்குண்டு ஆலையொன்றினை நிறுவுதல்
- கீழங்க பக்கவாதமுற்ற போர்வீரர்களுக்காக நீண்டகால உபசரணை நிலையங்கள் (முற்றாகவே நிறைவு செய்யப்பட்டுள்ளன)
- பிராந்திய பாதுகாப்பு மையமொன்றை நிறுவுதல்
- A 320 சியுமிலேற்றர் பேஸ் வகையிலான தரப்படுத்தல் அமைப்பாண்மை யொன்றைத் தாபித்தல்.
- சமுத்திர நகரக் கருத்திட்டம்
- பிளேயார் பெலட் வகைச் சேர்ந்த தோட்டா உற்பத்தி ஆலையொன்றை நிறுவுதல்
- பாதுகாப்புக் கைத்தொழில் பேட்டையொன்றைத் தாபித்தல்
- ஊவ வெல்லஸ்ஸ மற்றும் புத்தல பல்கலைக்கழகங்களை விரிவாக்குதல்.

கூட்டாண்மைத் தோற்றப்பாடுகள்

கம்பெனியின் பெயர்	:	லங்கா லொஜிஸ்ரிக்ஸ் அன்ட் ரெக்னொலொஜிஸ் லிமிரெட்
சட்டபூர்வ அந்தஸ்து	:	வரையறுக்கப்பட்ட பொறுப்புடைய கம்பெனி
பதிவுசெய்த அலுவலகம்	:	4 - 205, பிஎம்ஐசீஎச், பௌத்தாலோக மாவத்த, கொழும்பு.7
கூட்டிணைத்த திகதி	:	2006 செம்ரெம்பர் 04 (2010 செப்ரெம்பர் 01 இல் மீள்பதிவு செய்யப்பட்டது)
கம்பெனிப் பதிவிலக்கம்	:	N (PBS) 1331

பணிப்பாளர் சபை :	திரு. என். பெரேரா	- தவிசாளர் / மு.ப
	திரு. எல். ஆர். த சில்வா	- பணிப்பாளர்
	திரு. டப்ளியூ. ஏக்கநாயக்க	- பணிப்பாளர்
	எல்.என்.த சில்வா சந்திரசேன	- பணிப்பாளர் கம்பெனி செயலாளர்
	திரு. எஸ். சேனாரத்ன	- பணிப்பாளர்

செயலாளர் : திரு. எல். என். த சில்வா சந்திரசேன
383, கோட்டே வீதி,
ராஜகிரிய
தொலைபேசி : 011 – 2868793

கணக்காய்வாளர்கள் : பி. ஆர். த சில்வா அன்ட் கம்பெனி
(பட்டயக் கணக்காய்வாளர்கள்)
22/ 4, விஜய குமாரணதுங்க மாவத்த,
தொலைபேசி : 011 – 4510368 / 011 – 4510268

வங்கியாளர் : இலங்கை வங்கி
சுதந்திரச் சதுக்க கிளை
டொறிங்டன்
கொழும்பு 07.
தொலைபேசி : 011 – 2678073

தேசிய பாதுகாப்பு அமைச்சு செயலாளரது செய்தி

முப்பது வருட நீண்டகால இடைவேளையின் பின்னர் பயங்கரவாதமற்ற ஒரு யுகம் எமது நாட்டில் தோன்றியுள்ளது. அரசியல் தலைமைத்துவம், இலங்கை ஆயுதப்படையினர் மற்றும் பொலிசாரது தலைசிறந்த அர்ப்பணிப்பு மற்றும் ஈடுபாடு காரணமாக இந்த பயங்கரவாத அனர்த்தத்தை வெற்றிகரமாக ஒழித்துக்கட்ட இயலுமாயிற்று இந்த சவால்மிக்க பணியின்போது இலங்கையின் ஆயுதப்படையினருக்கு இராணுவம்சார் பண்டங்கள் சேவைகள் மற்றும் படைப்பிரிவுகளுக்கு அவசியமான வழங்கல்களை பெற்றுக் கொடுப்பதன் மூலமாக தீர்வுக்கட்டமான வகிபாகமொன்றை லங்கா லொஜிஸ்ரிக்ஸ் அன்ட் ரெக்னோலொஜிஸ் லிமிரெட் ஈடேற்றியது.

கடுமையான அர்ப்பணிப்பின் மத்தியில் வென்றெடுத்த சமாதானத்தை நிலைபேறானதாக பேணி வருதலுக்காக உங்களின் இடையறாத ஒத்துழைப்பு பாரிய சக்தியாக அமையுமென்றது எனது நம்பிக்கையாகும். தற்போது யுத்தம் முடிவடைந்துள்ளதால் எதிர் காலத்தில் உங்களின் விடயப்பரப்பினை விரிவாக்க வேண்டியது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். வெற்றியின் சிகரத்தை அடைவதிலான லங்கா லொஜிஸ்ரிக்ஸ் அன்ட் ரெக்னோலொஜிஸ் லிமிரெட்டின் முயற்சி வெற்றியடையட்டுமென நான் உளப்பூர்வமாக வாழ்த்துகிறேன்.

தவிசாளரது மீளாய்வு

இலங்கை ஆயுதப்படை, பொலீசினை உள்ளிட்ட பாதுகாப்பு அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுக்கு இராணுவம்சார் பண்டங்களையும் பொருட்களையும் கொள்வனவு – வழங்கல் செய்வதற்கான வசதிகளை வழங்கும் பொருட்டு தாபிக்கப்பட்ட ஒரு கம்பெனி என்ற வகையில் இந்த நாட்டில் இருந்து பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டுவதற்காக எம்மால் எளிமையான ஆனால் தீர்வுக்கட்டமான கடமையினை ஈடேற்ற வேண்டி நேரிட்டது. மூன்று தசாப்தங்களாக நிலவிய அழிவுமிக்க யுத்தம் முடிவடைவதை நாங்கள் கண்டோம். மிகவும் கஷ்டமான இப்பணியின்போது எமது வகிபாகத்தை ஈடேற்ற இயலுமானமை தொடர்பாக நாங்கள் தன்னடக்கத்துடன் மகிழ்ச்சியடைகிறோம்.

அரசாங்கத்திற்கு அரசாங்கம் எனும் அடிப்படையில் இராணுவ கொள்வனவு வழங்கல் துறையிலான எமது பிரவேசமானது இக்கொடுக்கல் வாங்கலில் மூன்றாந் தரப்பினது முகவர்களை தூரவிலக்கி வைப்பதில் முக்கியமான வகிபாகத்தை ஈடேற்றியது. அதற்கிணங்க இலங்கை அரசாங்கத்திற்கு கணிசமான தொகைப் பணத்தை சேமித்துக் கொடுக்க எமக்கு இயலுமாயிற்று. எமது பிரதான நோக்கம் ஏற்கெனவே அடையப் பெற்றுள்ளதால் நாங்கள் தற்போது பாதுகாப்பு அமைச்சு நிறைவேற்றுகின்ற கருத்திட்டங் களுக்கான வசதிகளை வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம்.

லங்கா லொஜிஸ்ரிக்ஸ் அன்ட் ரெக்னோலொஜிஸ் லிமிரெட்டின் பணிப்பாளர் சபைக்கும், பிரதம நிறைவேற்று அதிகாரி திரு. ஜயந்த விக்ரமசிங்கவுக்கும், பதவியணிக்கும் அவர்களின் அயராத ஒத்துழைப்புக்காகவும் அர்ப்பணிப்புக்காகவும் எனது பாராட்டுக் களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு

பின்னணி

வடக்கு – கிழக்கு மனிதாபிமான செயற்பாட்டின் ஆரம்பத்துடன் மூன்றாந் தரப்பினரைத் தடுப்பதற்காக அரசாங்கத்திற்கு அரசாங்கம் எனும் அடிப்படையில் இராணுவ கொள்வனவு வழங்கலை மேற்கொள்ளும் பொருட்டு இணைப்பாக்க நிறுவனமொன்றைத் தாபிக்க வேண்டியதன் அவசியம் தோன்றியது. இவற்றை வழங்கும் பொருட்டு லங்கா லொஜிஸ்ரிக்ஸ் அன்ட் ரெக்னோலொஜிஸ் லிமிரெட் ஆரம்பிக்கப்பட்டமை உதவியாக அமைந்தது. முரண்பாடுகளற்ற சமாதானம் நிறைந்த நாட்டைக் காணும் அவாவுடனேயே நாங்கள் இந்த அரும்பணியில் ஈடுபட்டோம். இக்கனவு தற்போது நனவாக மாறியுள்ளதுடன் அப்பணியின் போது எமது வகிபாகத்தை ஈடேற்ற இயலுமானதையிட்டு நாம் தன்னடக்கத்துடன் பெருமிதம் அடைகிறோம்.

நாங்கள் ஏற்கனவே எமது வியடப்பரப்பினை விரிவாக்கி மிகவும் அகல்விரிவான எல்லையை அடைந்துள்ளதோடு தேசிய பாதுகாப்பு நாட்டமுடைய வணிகக் கருத்திட்டங்களிலும் தொழில்முயற்சிகளிலும் மென்மேலும் ஈடுபடக் கருதியுள்ளோம். கருவில் இருந்து இற்றைவரையான எமது பயணப்பாதையில் நாங்கள் பல முக்கியமான திருப்புமுனைகளை கடந்து வந்துள்ளோம். எனினும் நாம் சாதிக்க வேண்டியவை பல உள்ளதோடு அடுத்துறும் ஒரு சில ஆண்டுகளில் லங்கா லொஜிஸ்ரிக்ஸ் அன்ட் ரெக்னோலொஜிஸ் லிமிரெட் கம்பெனியால் தனது பூரணத்துவத்தை அடைய இயலுமென நான் நம்புகிறேன்.

நிதிசார் மீளாய்வு

மீளாய்வாண்டில் ரூ. 7.6 மில்லியன. வரிவிதிப்புக்கு பிந்திய இலாபம் பதிவாகியதோடு அது 2009/ 2010 ஆம் ஆண்டுக்கான ரூ. 2.0 மில்லியனுடன் ஒப்பிடுகையில் கணிசமான அதிகரிப்பாகும். தனது தொழில்முயற்சி வாழ்க்கை வட்டத்தின் தொடக்கப்பருவத்தில் உள்ள ஒரு கம்பெனி என்ற வகையில் இது தற்போது வளர்ச்சிப் பருவத்திலேயே உள்ளது. 2009 / 2010 ஆம் ஆண்டின் வீதங்களாக நிலவிய 17%, 12% மற்றும் 5% என்பவற்றுடன் ஒப்பிடுகையில் மொத்த இலாப வீதம், தொழிற்படாடு இலாபவீதம் மற்றும் நிகர இலாப வீதம் முறையே 73%, 24% மற்றும் 17% வரை அதிகரித்துள்ளது.

நடப்புத் தொழிற்பாடுகள்

கம்பெனி நிகழ்காலத்தில் ஆயுதப் படையினது தேவைப்பாடுகளுக்கான கொள்வனவு வழங்கல் வசதிகளை வழங்குவதில் ஈடுபட்:டுள்ளது. சீன மக்கள் குடியரசு அரசாங்கத் திற்குச் சொந்தமான ஒரு கம்பெனியுடன் கைச்சாத்திட்ட ஆரம்ப உடன்படிக்கையூடாக கையிருப்பினைப் பூர்த்தி செய்யும் பொருட்டு ஆயுதங்களையும் தோட்டாக்களையும்

கொள்வனவு செய்து வழங்குவதற்கு மேலதிகமாக ரஷ்ய கடன் உதவி மற்றும் இந்திய கடனுதவி நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக நிதியுதவி வழங்கப்படுகின்ற ஆயுதப்படைக் கொள்வனவுத் தேவைகளுக்கான கொள்வனவு வழங்கல் சேவைகளை வழங்குவதிலும் கம்பெனி ஈடுபட்டுள்ளது. வழங்கலாளர்களால் ரெண்டர் சமர்ப்பிக்கப்படுகையில் இலத்திர னியல் கூறுவிலை சமர்ப்பித்தலை (ESB) அறிமுகஞ் செய்வதற்கான முதற்கட்ட நடவடிக்கையை நாங்கள் மேற்கொண்டுள்ளோம்.

கருத்திட்ட முகாமை

அக்குறுகொட பாதுகாப்புப்படைத் தலைமையக நிர்மாணிப்பின் போது கருத்திட்ட முகாமையாளரது கடமைப்பொறுப்பினை நாங்கள் பொறுப்பேற்றுள்ளோம். அதற்கு மேலதிகமாக கீழே காட்டப்பட்டுள்ள கருத்திட்டங்களினதும் கருத்திட்ட முகாமையாளரகள் நாங்களே..

- மிரிஹான மற்றும் நாரஹேன்பிற்ற பொலிஸ் தலைமையத் தொகுதியை நிர்மாணித்தல்.
- பிரசைகளின் தரவுகளை இலத்திரனியல் முறையில் களஞ்சியப்படுத்தல் மற்றும் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டையை விநியோகிப்பதற்காக தேசிய ஆட்பதிவாளர் அலுவலகமொன்றை நிறுவுதல்

இக்கருத்திட்ட முகாமைத்துவப் பணிகளுக்கு மேலதிகமாக அரச தனியார்துறை பங்காண்மை அடிப்படையில் இராணுவ தரத்தைச் சேர்ந்த பாதணிகள் உற்பத்தி ஆலையொன்றை நிறுவுவதற்கான நடவடிக்கைகளையும் நாங்கள் மேற்கொண்டு வருகிறோம்.

அத்துடன் பாதுகாப்பு அமைச்சின் ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி நிலையத்திற்கு வழங்கலுக்கான ஒத்துழைப்பினையும் நாங்கள் வழங்கி வருகிறோம்.

எதிர்காலத்திட்டங்கள்

ஏற்கனவே நாம் அடைந்துள்ளவற்றைப் பலப்படுத்துகின்ற அதேவேளையில் அரச மற்றும் தனியார் நிறுவனங்களை விஞ்சி போட்டித்தன்மைமிக்க சாதகமான நிலைமையை உருவாக்கிக் கொள்ளும் பொருட்டு அமைப்பாண்மையின் மனித வளங்களை மேற்படுத்தவும் முன்னேற்றகரமாக்கவும் லங்கா லொஜிஸ்ரிக்ஸ் அன்ட் ரெக்னோலொஜிஸ் லிமிரெட் கம்பெனியை விரிவாக்க அவசியமான நடவடிக்கைகளை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தேசிய ஆட்பதிவாளர் அலுவலகம், இலத்திரனியல் வணிகச் செயற்பாடுகள் (e – commerce) களான இலத்திரனியல் தரவுப் பரிமாற்றம் போன்ற தேசிய பாதுகாப்பு நாட்டமுடைய கருத்திட்டங்களுக்காக அரசாங்கம் (லங்கா லொஜிஸ்ரிக்ஸ் அன்ட் ரெக்னோலொஜிஸ் லிமிரெட்) மற்றும் வெளிநாட்டு மூலோபாய

தொழில்நுட்பத் தரப்பினர்களுடன் ஒருங்கிணைந்த தொழில் முயற்சிகளை உருவாக்க நாங்கள் நடவடிக்கை எடுத்துவருகிறோம். ஆதற்கு மேலதிகமாக பாதுகாப்பு அமைச்சின் ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் ஒத்துழைப்புடன் சுதேச பாதுகாப்புக்கு கைத்தொழிலை நிறுவவும் சிவில் கருத்திட்டங்களுக்காக அரச தனியார்துறை பங்காண்மையை ஏற்படுத்த நாம் திட்டங்களை வகுத்து வருகிறோம்.

பாதுகாப்பு செயலாளருக்கும், பணிப்பாளர் சபைக்கும். தவிசாளருக்கும் அவர்களின் வழிகாட்டலுக்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அமைப்பாண்மைக்கான உச்சமட்டப் பங்களிப்பினை வழங்குகின்ற லங்கா லொஜிஸ்ரிக்ஸ் அன்ட் ரெக்னோலொஜிஸ் லிமிரெட் பதவியணிக்கு எனது விசேட நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜயந்த விக்ரமசிங்க

பிரதம நிறைவேற்று அதிகாரி

சிரேட்ட முகாமைத்துவம்

திரு. ஜயந்த விக்ரமசிங்க	-	பிரதம நிறைவேற்று அதிகாரி
திரு. நிசாந்த த சில்வா	-	கருத்திட்ட மற்றும் நெறிப்படுத்தல் தலைமை அதிகாரி
திரு. ஸ்ரீலால் மஹிந்தபால	-	நிதி மற்றும் கொள்வனவு - வழங்கல் தலைமை அதிகாரி
திரு. தம்மிக்க பர்னாந்து	-	வழங்கல் மற்றும் கருத்திட்ட தலைமை அதிகாரி
திரு. உபுல் குணசேகர	-	கருத்திட்ட முகாமையாளர்
திரு. தமிந்த ஜயசேகர	-	கருத்திட்ட முகாமையாளர்

நிதிசார் முனையம்சங்கள்

	2011	2010	மாற்றம் %
வருமானம்	40,091,007	40,706,636	13
மொத்த இலாபம்	33,674,768	6,729,253	400
வரிவிதிப்புக்கு முந்திய இலாபம்	10,825,165	4,807,488	125
வரிவிதிப்பு	-3,176.129	-2,771,823	15
வரிவிதிப்பிற்கு பிந்திய இலாபம்	7,648,946	2,035,66527	27
நடைமுறையல்லாச் சொத்துக்கள்	4,030,340	8,433,648	-52
நடைமுறைச் சொத்துக்கள்	132,616,469	137,993,860	-4
மொத்தச் சொத்துக்கள்	136,646,809	146,427,507	-7
மொத்த உரிமைப்பங்குகள்	100,947,221	93,298,275	8
நடைமுறையல்லாச் பொறுப்புக்கள்	1,870,425	1,331,563	40
நடைமுறைப் பொறுப்புக்கள்	33,829,163	51,797,669	-35
நிகர சொத்துக்கள்	100,947,221	93,298,275	8

வீதங்கள்

பங்கொன்றுக்கான ஈட்டல்	37,312	9,930	276
பங்கொன்றுக்கான நிகர சொத்துக்கள்	492,425	455,114	8
பங்குலாபம் மீதான இலாபம்	7.58	2.18	247.28
மொத்த சொத்துக்கள் மீதான இலாபம்	7.92	3.28	141.29
மொத்த இலாப விகிதம்	73.00	17.00	329.41
தொழிற்பாட்டு இலாப விகிதம்	24.00	12.00	100.00
நிகர இலாப எல்லை	17.00	5.00	240.00
நடைமுறைச் சொத்துக்கள் வீதம் (தடவைகள்)	3.92	1.99	96.98

.

பணிப்பாளர் சபை

திரு. நிமல் பெரேரா தவிசாளர்

திரு. லெய்சா ஆர். த சில்வா சந்திரசேன – பணிப்பாளர் / கம்பெனிச் செயலாளர்

திரு. லலித் ஆர் த சில்வா

திரு. வசந்த ஏக்கநாயக்க

திரு. சுதர்ஷன சேனாரத்ன

பணிப்பாளர்களின் அறிக்கை

பணிப்பாளர்கள் 2011 மார்ச் 31இல் முடிவடைந்த நிதி ஆண்டுக்கான கணக்காய்வு செய்யப் பட்ட கணக்குகளையும் சுயாதீனமான கணக்காய்வாளர்களின் அறிக்கையையும் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

ஆண்டுக்கான மீளாய்வு

அமைச்சரவையின் கௌரவ அமைச்சர்களின் தீர்மானத்தின் பிரகாரம் மீளாய்வாண்டில் கம்பெனி வசதிகளை வழங்கிய கொள்வனவு – வழங்கலுக்காக ரூ. 189 மில்லியன் நிர்வாகக் கட்டணங்களுக்கான உரித்துக்கோரி பெயரளவிலான இன்வொயிஸ் விநியோகிக் கப்பட்டன.

சம்பந்தப்பட்ட ஆயுதப் படையினருக்காக ஒதுக்கப்பட்ட செலவுத் தலைப்புக்களின் பிரகாரம் இக்காலப்பகுதிக்காக சேவைக்கட்டணயாக ரூ. 31.9 மில்லியனை நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம்.

ரூ. 46.0 மில்லியன் புரள்வினை கம்பெனியால் பதிவுசெய்ய இயலுமாயிற்று. கடந்த வருடத்தில் ஈட்டிய ரூ. 40.0 மில்லியனுடன் சார்புடையதாக 2010/2011 நிதியாண்டின் பெறுபேறுகளின் பிரகாரம் ரூ. 7.6 மில்லியன் வரிவிதிப்புக்கு பிந்திய இலாபம் சுட்டிக் காட்டப்படுகின்றது. அது முந்திய ஆணடில் ரூ.2.0 மில்லியனாக விளங்கியது. நிலையான வைப்புக்கள் மீதான வட்டியே இலாபம் அதிகரித்த மைக்கான காரணமாக அமைந்தது.

முதன்மைச் செயற்பாடுகள்

இராணுவம்சார் பண்டங்களுக்கான வசதிகளை வழங்குவதற்கு அப்பால் சென்று தேசிய பாதுகாப்பு நாட்டத்துடனான பாதுகாப்பு சார்ந்த கருத்திட்டங்கள் வரை கம்பெனியின் நடவடிக்கைகள் விரிவடைந்தன. அக்கருத்திட்டங்கள் பிரதானமான மூன்று பகுதிகளாக வகுக்கப்படும்.

- சிவில் கருத்தித்திட்டங்களுக்கான அரச தனியார்துறை பங்காண்மை
- சுதேச பாதுகாப்பு தொடர்பான தொழில்துறையினை முன்னேற்றுவதற்கான அரசாங்க கருத்திட்டங்கள் (லங்கா லொஜிஸ்ரிக்ஸ் அன்ட் ரெக்னொலொஜிஸ் லிமிரெட் ஊடாக)
- அரசாங்கத் (லங்கா லொஜிஸ்ரிக்ஸ் அன்ட் ரெக்னொலொஜிஸ் லிமிரெட் ஊடாக)திற்கும் வெளிநாட்டு மூலோபாய தொழில்நுட்பத் தரப்பினருக்கும் இடையிலான ஒருங்கிணைந்த கம்பெனிகள்.

கூட்டாண்மை ஆளுகை

மூலோபாயக் குறிக்கோள்களை ஆக்குதல், தலைமைத்துவம் வழங்குதல் மற்றும் முகாமைத்துவத்தை மேற்பார்வை செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய கம்பெனியின் ஆளுகைக்கு கம்பெனியின் பணிப்பாளர் சபை பொறுப்பு வகிக்கின்றது.

புரள்வு

ஆண்டுக்கான புரள்வு ரூ. 46,091,097 ஆகும்.

இலாப நட்டக் கணக்கு

நிதிசார் பொழிப்புகள்	2009/2010 ரூ.	2008/ 2009 ரூ.
புரள்வு	46,091,096.60	40,706,635.00
நேரடிக் கிரயம்	(12,416,330.54)	(33,977,382.00)
மொத்த இலாபம்	33,674,766.06	6,729,253.00
பிற வருமானம்	15,823,597.20	34,231,834.00
மேந்தலைச் செலவுகள்	(38,494,455.05)	(36,153,599.00)
தொழிற்பாட்டு இலாபம் / (நட்டம்	11,033,908.21	4,807,488.00
வரிவிதிப்புக்கு பிந்திய வருமானம்	7,648,945.85	2,035,664.00

மூலதனச் செலவினம்

நிலையான சொத்துக்களைக் கொள்ளல் தொடர்பாக கூறப்பட்ட மொத்த மூலதனச் செலவினம் இவ்வாண்டில் ரூ. 74,907 ஆக அமைந்ததோடு முந்திய ஆண்டில் ரூ. 2,251,088 ஆக அமைந்தது.

ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 08 இல் கம்பெனியின் ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி பற்றிய விபரங்கள் காட்டப்பட்டுள்ளன.

ஒதுக்கங்கள்

ஆண்டிற்கான மூலதன மற்றும் வருமான ஒதுக்கங்களின் அசைவுகள் பற்றி உரிமைப் பங்கிலான மாற்றங்ள் பற்றிய கூற்றில் காட்டப்பட்டுள்ளன.

ஐந்தொகைத் தேதிக்குப் பிந்திய நிகழ்வுகள்

கணக்குகளில் வெளிப்படுத்தல்களை சீராக்கல்களோ தேவைப்படுகின்ற தருணங்கள் ஐந்தொகைத் தேதிக்குப் பின்னர் தோன்றவில்லை.

சபைக் குழுக்கள்

பின்வரும் சபை உறுப்பினர்கள் கணக்காய்வுக் குழுவில் செயலாற்றுகின்றனர்.

1. திரு. வசந்த ஏக்கநாயக்க (தவிசாளர்)
2. திரு. லலித் ஆர் த சில்வா
3. திரு. சுதர்ஷன சேனாரத்ன

ஒப்பந்தங்களிலான பணிப்பாளர்களின் ஈடுபாடு

2009/2010 நிதியாண்டுக்காக ஒப்பந்தங்கள் தொடர்பில் பணிப்பாளர்களின் ஈடுபாடு நிலவவில்லை.

பணிப்பாளர் கட்டணங்கள்

இவ்வாண்டில் செலுத்தப்பட்ட பணிப்பாளர் கட்டணம் ரூ. 610,000 ஆக அமைந்தது.

பணிப்பாளர்கள் பங்குகளை வைத்திருத்தல்

2011 மார்ச் 31 இல் முடிவடைந்த நிதி ஆண்டில் பணிப்பாளர்கள் கம்பெனியின் பங்குகளை வைத்திருக்கவில்லை

கணக்காய்வாளர்கள்

பி. ஆர். த சில்வா அன்ட் கம்பெனி (பட்டயக் கணக்காய்வாளர்கள்) இளைப்பாறுவதோடு அவர்களை மீண்டும் நியமிப்பதற்காகவும் அவர்களுக்கான ஊதியத்தை நிர்ணயிப்பதற் கான அதிகாரத்தை சபைக்கு வழங்குதலும் ஒரு பிரேரணை மூலமாக வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பிரேரிக்கப்படும்.

கணக்காய்வாளர் பி. ஆர். த சில்வா அன்ட் கம்பெனிக்கு 2011 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான ஊதியமாக ரூ. 107,100/= செலுத்தப்பட்டது.

பணிப்பாளர்கள் அறிந்தவகையில் கணக்காய்வாளர் கம்பெனியுடன் (ஒரு கணக்காய்வா ளராக அன்றி) மேலே குறிப்பிட்ட வெளிப்படுத்தல்களுக்குப் புறம்பாக எவ்விதமான தொடர்புகளையும் கொண்டிருப்பதில்லை. அத்துடன் கணக்காய்வாளருக்கு கம்பெனியுடன் எவ்விதமான ஈடுபாடும் கிடையாது.

சபைக்காகவும், அதன் சார்பிலும்,

நிமல் பெரேரா
(தவிசாளர்)

கூட்டாண்மை ஆளுகைக் கூற்று

கம்பெனி நிர்வாகத்திற்கு பணிப்பாளர்சபை பொறுப்புக்கூற வேண்டுமென்பதோடு பணிப்பாளர் சபையினை நியமிப்பதும் பொருத்தமான நிர்வாகக் கட்டமைப்பு நிலவுகின்ற தென்பதை உறுதிப்படுத்துவதுமே பங்குடைமையாளர்களின் பொறுப்பாகும்.

லங்கா லொஜிஸ்ரிக்ஸ் அன்ட் ரெக்னொலொஜிஸ் லிமிரெட் கம்பெனியின் பணிப்பாளர் சபை தனது அனைத்துச் செய்றபாடுகளிலும் தொழில்சார் நம்பிக்கை மற்றும் உயர் தொழில்வாண்மைக்காக தன்மை அர்ப்பணித்துள்ளது. அத்தகைய அர்ப்பணிப்பின் ஒரு பகுதியாக, தாபனம்சார் நிர்வாகத்தின் உயர்ந்த தரங்களையும் சாதனமாக நடைமுறை களையும் விருத்தி செய்த பணிப்பாளர் சபை ஒத்துழைப்பு வழங்குகின்றது.

பணிப்பாளர் சபை

கம்பெனியின் மூலோபாய நோக்கங்களை வகுத்தல், அவற்றை நடைமுறைப்படுத்துவதற் கான தலைமைத்துவம் அளித்தல், தொழில் முயற்சியின் முகாமைத்துவத்தை மேற்பார்வை செய்தல் மற்றும் பொதுதிறைசேரிக்கு (பகிரங்க தொழில்முயற்சிகள் திணைக்களம்) அறிக்கை செய்தல் என்பன பணிப்பாளர் சபையின் அடிப்படை பொறுப்புகளாகும்.

அத்துடன் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவான செயற்பாடுகள் மூலமாக பங்குடைமையாளர்கள் மற்றும் பங்கீடுபாட்டாளர்களுக்காக பெறுமதியை உருவாக்குதலும் நேர்மை, வெளிப்படைத்தன்மை, நியாயமான கொடுக்கல்-வாங்கல் மற்றும் வகைபொறுப்புக் கூற்றுக்கு நன்மைகளைப் பெற்றுக் கொடுக்கின்ற கலாச்சாரமொன்றை மேம்படுத்துதலும் பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும்.

பணிப்பாளர் சபைக் கூட்டங்கள்

பணிப்பாளர் சபைக்கூட்டம் மாதந்தோறும் நடைபெறும். அவசியமேற்படுமிடத்து விஷேட பணிப்பாளர் சபைக் கூட்டங்களும் நடத்தப்படும். பணிப்பாளர் சபை நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர்களைக் கொண்டதாக அமைவதோடு கம்பெனியின் தீர்மானம் மேற்கொள்ளும் செயற்பாடு மீது தாக்கமேற்படுகின்ற சுயாதீனமான தீர்மானங்களை மேற்கொள்ளும் ஆற்றல் நிலவுகின்றது.

கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

கம்பெனியின் கணக்காய்வுக்குழு நிறைவேற்றுத்தரமல்லாத பணிப்பாளர்களை அதாவது வசந்த ஏக்கநாயக்க (தவிசாளர்,) லலித் த சில்வா மற்றும் சுதர்ஷன சேனாரத்த ஆகியோரை உள்ளடக்குகின்றது. கணக்காய்வுக்குழுவின் பிரதான கடமைகளும் பொறுப்புக்களும் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது.

அ) இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கம்பெனியின் நிதிக்கூற்றுகளைத் தயாரித்தல், சமர்ப்பித்தல் மற்றும் போதுமான அளவில் வெளிப்படுத்துதலை உள்ளிட்ட கம்பெனியின் நிதியறிக்கைகள் மற்றும் நிதியறிக்கையிடல் செயற்பாட்டின் தரம் மற்றும் நேர்மை பற்றிய மேற்பார்வைப் பொறுப்பினை ஈடேற்றுதல்

ஆ) 2007 இன் 07 ஆம் இலக்கமுடைய கம்பெனிகள் சட்டத்தினதும் சம்பந்தப்பட்ட நிதியறிக்கையிடல் சார்ந்த ஒழுக்கவிதிகளில் நிதி அறிக்கையிடல் மற்றும் தகவல் அவசியப்பாடுகளுடன் கம்பெனியின் அமைந்தொழுகல் பற்றிய மேற்பார்வை பொறுப்பினை ஈடேற்றுதல்

இ) இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அவசியப்பாடுகளைப் பூர்த்தி செய்ய கம்பெனி யின் உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் அபாயநேர்வு முகாமைத்துவம் போதுமான தென்பதை உறுதிசெய்யும் பொருட்டு உள்ள செயற்பாடுகளின் மேற்பார்வை தொடர் பிலான பொறுப்பினை ஈடேற்றுதல் மற்றும் சட்டமுறையான அத்துடன் நியதிச்சட்ட முறையான தேவைப்பாடுகளுக்கு கம்பெனி அமைந்தொழுகின்றதென்பதை உறுதிப் படுத்தல்.

ஈ) கம்பெனியின் வெளிவாரி கணக்காய்வாளர்களின் சுயாதீனத்தன்மையையும் செயலாற்று கையையும் மதிப்பீடு செய்தல்.

உ) வெளிவாரி கணக்காய்வாளர்களை நியமித்தல், மீள் நியமனம் செய்தல் மற்றும் உசிதமான சந்தர்ப்பத்திற்கேற்றவாறு அவர்களை நீக்குதல் தொடர்பான பணிப்பாளர் சபைக்கு விதப்புரை செய்தல்

ஊ) நியதிச்சட்டமுறையான கணக்காய்வு நீங்கலாக கம்பெனிக்காக வெளிவாரி கணக்காய் வாளர்கள் பொறுப்பேற்கப்படுகின்ற ஏதேனம் பணியின் சார்புத்தன்மை உசிதமானதெனில் பரிசீலனை செய்தல் மற்றும்

எ) வெளிவாரி கணக்காய்வாளர்களின் ஊதியத்தையும் ஈடுபடுத்துவதற்கான விதிமுறை களையும் அங்கீகரித்தல்.

2011 மார்ச் 31 இல் நிதியாண்டுக்காக கணக்காய்வுக்குழு காலாண்டுதோறும் கூடியது. பிரதம நிறைவேற்று அதிகாரியையும் கொள்வனவு வழங்கல் வசதிகள் மற்றும் நிதிப் பிரிவுத் தலைமையதிகாரிகளையும் கூட்டங்களின் கலந்து கொள்ளுமாறு கணக்காய்வுக் குழு அழைப்பு விடுத்த போதிலும் அவர்களைக் கூட்டங்களிலிருந்து விலகிச் செல்லுமாறு வேண்டுகோள் விடுப்பதற்கான உரிமையைக் குழு தன்னகத்தே வைத்துக்கொண்டது.

மீளாய்வு செய்யப்படுகின்ற நிதியாண்டில் கணக்காய்வுக்குழு ஏனைய விடயங்களுக் கிடையில் பின்வரும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டது.

- கணக்காய்வு செய்யப்படாத மாதாந்த நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு
- ஆண்டுக்காக கணக்காய்வு செய்யப்பட்ட நிதியறிக்கைகளின் மீளாய்வு
- வெளிவாரி கணக்காய்வாளர்களால் விநியோகிக்கப்பட்ட முகாமைத்துவக் கடிதத்தின் மீளாய்வு மற்றும் முகாமைத்துவத்தின் தொடர் நடவடிக்கை செயற் பாடுகளின் மேற்பார்வை
- கம்பெனியிடமிருந்து அவர்கள் சுயாதீனமாக உள்ளார்களென கம்பெனியின் முகாமைத்துவம் தொடர்பான வெளிவாரி கணக்காய்வாளர்களுடனான உரை யாடல்கள்
- நியதிச்சட்டமுறையாக அறிக்கையிடல் மற்றும் கொடுப்பனவுத் தேவைப்பாடுகளுடன் அமைந்தொழுகல் அறிக்கையிடல் மீளாய்வு.
- வெளிவாரி கணக்காய்வின் செயல்விளைவு பற்றிக் குழு மீளாய்வு செய்ததோடு வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பங்குதாரர்களின் அங்கீகாரம் கிடைப்பதற்கு கட்டுப் பட்டதாக பீ. ஆர். த சில்வா பட்டயக் கணக்காய்வாளர்களை கம்பெனயின் வெளிவாரிக் கணக்காய்வாளர்களாக அடுத்துறும் ஆண்டுக்காக மீண்டும் நியமிக்க பணிப்பாளர்சபை விதப்புரை செய்தது.

நிதிசார் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு

நிதிசார் கூற்றுக்கள் தொடர்பிலான பணிப்பாளர்களின் பொறுப்பு பின்வரும் கூற்றின் காட்டப்பட்டுள்ளது. 2007 இன் 7 ஆம் இலக்கமுடைய கம்பெனிகள் சட்டத்தின் ஏற்பபாடு களின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பற்றிய பணிப்பாளர்களின் பொறுப்பு அறிக்கையில் காட்டப்பட்டுள்ளது.

நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கம்

(அ) நிதியாண்டின் இறுதியில் கம்பெனியின் செயற்பாடுகள் தொடர்பான உண்மை யானதும் நியாயமானதுமான அபிப்பிராயத்தை முன்வைக்கின்ற ஐந்தொகை மற்றும்

(ஆ) நிதியாண்டுக்கான கம்பெனியின் இலாப – நட்டம் பற்றிய உண்மையானதும் நியாயமானதுமான அபிப்பிராயத்தை முன்வைக்கின்ற கம்பெனியின் வருமானக் கூற்று என்பவையே ஆகும்.

நிதிக்கூற்றுகள்,

அ. தொடர்ச்சியான வகையில் தெரிவுசெய்தும் பிரதியீடு செய்யப்பட்டும் உள்ள பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏதேனும் பொருண்மையான தவிர்த்தல் இருப்பின் அதனை வெளிப்படுத்தியும் விபரித்தும், அத்துடன்,

ஆ. இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் அமைந்தொழுகி, அத்துடன்,

இ. கொடுக்கல் - வாங்கல்களின் தன்மை மற்றும் சாரத்தை சரியான வகையில் பிரதி பலிக்கத்தக்கதாக நியாயமானதும் விவேகம் கொண்டதுமான தீர்மானங்களையும் மதிப்பீடுகளையும் மேற்கொண்டும், அத்துடன்

ஈ. கம்பெனிகள் சட்.டத்தின் பிரகாரம் அவசியமான தகவல்களை வழங்கியுமே தயாரிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் இந்நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் நடப்புத் தொழில்முயற்சி அடிப்படை பதிலீடு செய்யப்படுவதை நியாயப்படுத்தி நெறிப்படுத்தலை தொடர்ச்சியாக பேணிவர அவசியமான வளங்களைக் கம்பெனி கொண்டுள்ளதென பணிப்பாளர்கள் உத்தரவாதம் அளிக்க வேண்டியதும் அவசியமாகும்.

மேலும் கம்பெனியின் நிதி நிலைமையை நியாயமான திட்பநுட்பத் தன்மையுடன் வெளிக்கொணரும் பொருட்டு போதியளவு கணக்கறிக்கைகளை கம்பெனி பேணி வருகின்ற தென்பதை உறுதிசெய்ய வேண்டியதும் பணிப்பாளர்களின் பொறுப்பாகும்.

அதற்கு மேலதிகமாக மோசடிகளையும் பிற முறைகேடுகளையும் தடுத்தல் மற்றும் கண்டுபிடிக்கும் நோக்கத்துடன் உசிதமான உள்ளகக் கட்டுப்பாட்டு வழிமுறைகளைத் தாபிப்பதன் ஊடாக கம்பெனியின் சொத்துக்களை பாதுகாத்துக் கொள்வதற்கான நியாயமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் தொடர்பாகவும் பணிப்பாளர்கள் பொறுப்பு வகிக்க வேண்டும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கவம் கணக்காய்வாளர்களுக்குத் தமது கணக்காய்வு அபிப்பிராயத்தை முன்வைக்கவும் ஆற்றல் பெற்றுக் கொடுக்குமென அவர்கள் கருதுகின்ற எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளவும் எந்தவொரு விசாரணையையும் மேற் கொள்ளவும் இயலுமான எல்லாவிதமான ஒத்துழைப்பினையும் பணிப்பாளர்கள் வழங்க வேண்டும்.

இக்கூற்றின் காட்டப்பட்டுள்ளவாறு தமது பொறுப்பு உரியவகையில் ஈடேற்றப்பட்டுள்ள தென்பது பணிப்பாளர்களின் அபிப்பிராயம் ஆகும்.

இசைவு அறிக்கை

தனது உச்சமட்ட அறிவுக்கெட்டியவரை கம்பெனியால் செலுத்தப்பட வேண்டிய அனைத்து விதமான வரிகள், சுங்கத்தீர்வைகள் மற்றும் வருமானவரி கம்பெனியின் அனைத்து ஊழியர்களுக்காகவும் சம்பந்தப்பட்டதாக செலுத்தப்பட வேண்டிய அனைத்துவிதமான பங்களிப்புத் தொகைகள், வருமானவரி, வரிகள் மற்றும் ஐந்தொகைத் தேதியில் கம்பெனியால் செலுத்தப்பட வேண்டியதும் செலுத்தவேண்டி இருந்ததுமான ஏனைய அனைத்துவிதமான நியதிச்சட்ட முறையான கொடுப்பனவுகளும் செலுத்தப்பட்டுள்ளதை பணிப்பாளர்கள் உறுதிப்படுத்துகிறார்கள்.

லங்கா லொஜிஸ்ரிக்ஸ் அன்ட் ரெக்னொலொஜிஸ் லிமிரெட்

2011 மார்ச் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிசார் கூற்றுக்கள்

பி. ஆர். த சில்வா அன்ட் கம்பெனி
பட்டயக் கணக்காய்வாளர்கள்

பிரத்தியேகமானதும் இரகசியமானதுமாகும்.

லங்கா லொஜிஸ்ரிக்ஸ் அன்ட் ரெக்னொலொஜிஸ் லிமிரெட்டின் அங்கத்தவர்களுக்காக சமர்ப்பிக்கப்படுகின்ற சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை

1. நிதிக்கூற்றுக்கள் பற்றிய அறிக்கை

2011 மார்ச் 31 ஆந் தேதியிலான ஐந்தொகை மற்றும் வருமானக்கூற்று, அத் தேதியில் முடிவடைந்த ஆண்டுக்கான உரிமை மாற்றம் பற்றிய கூற்று, காசுப் பாய்வுக்கூற்று மற்றும் பக்கம் (1) முதல் (16) வரை விபரிக்கப்பட்டுள்ள முக்கிய மான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் பிற தெளிவுபடுத்தல் குறிப்புக்களைக் கொண்ட லங்கா லொஜிஸ்ரிக்ஸ் அன்ட் ரெக்னொலொஜிஸ் லிமிட்ரெட்டின் இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுகள் எம்மால் கணக்காய்வு செய்யப்பட்டன.

2. நிதிக்கூற்றுகள் தொடர்பிலான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக இந்த நிதிக்கூற்றுகளை தயாரிக்கும் மற்றும் நியாயமான வகையில் சமர்ப்பிக்கும் பொறுப்பு முகாமைத்துவத்திற்கு உண்டு. அத்துடன் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படு கின்ற பொருண்மையான பிறள்கூற்றுக்களின்றி நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கவும் நியாயமான வகையில் சமர்ப்பிக்கவும் ஏற்புடைய உள்ளக கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்கல் மற்றும் பேணிவருதல், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்தல் மற்றும் ஏற்புடைய நிலைமைகளின் கீழ் நியாயமான கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரித்தல் என்பவை இப்பொறுப்பில் அடங்கும்.

3. கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் அபிப்பிராயத்தை வெளியிடுவதிலான அடிப்படை

எமது கணக்காய்வினை அடிப்படையாகக்கொண்டு இந்த நிதிக்கூற்றுகள் சம்பந்தமாக எமது அபிப்பிராயத்தை தெரிவிப்பதே எமது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாக எமது கணக்காய்வினை மேற்கொண்டோம். நிதிக் கூற்றுகள் பொருண்மையில் பிறள்கூற்றுக்கள் அற்றனவா என்பது தொடர்பில் நியாயமான சான்றுரையைப் பெரும்பொருட்டு கணக்காய்வினைத் திட்டமிட வேண்டியது இந்த நியமங்களுக்கிணங்க அவசியமாகின்றது.

நிதிக்கூற்றுக்களில் அடங்கிய காசுப்பாய்வு மற்றும் வெளிப்படுத்தல்களை உறுதி செய்கின்ற பரிசோதனை அடிப்படைச் சான்றுகளை பரிசீலித்தல் கணக்காய்வில் அடங்குகின்றது. அத்துடன் பிரயோகிக்கப்பட்ட கோட்பாடுகள் மற்றும் முகாமைத் துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான மதிப்பீடுகளை மதிப்பீடு செய்தல் அத்துடன் ஒட்டுமொத்த நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படுதலை மதிப்பீடு செய்தலும் கணக்காய்வில் அடங்குகின்றது.

எனவே எமது அபிப்பிராயத்திற்கு நியாயமான அடிப்படையை எமது கணக்காய்வு வழங்குகின்றதென நாங்கள் நம்புகிறோம்.

4. அபிப்பிராயம்

எமது அபிப்பிராயத்திற்கிணங்க எமது விசாரணகளுக்கிணங்க புலப்படுகின்ற வகையில் மேலே (4) ஆந் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் மற்றும் அதன் மூலமாகத் தோன்றுகின்ற ஏதேனும் இடைநேர்விளைவான சீராக்கல்கள் நீங்கலாக, கம்பெனியால் 2011 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான முறையான கணக்கறிக்கைகள் பேணப்பட்டு வந்துள்ளதோடு இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் 2011 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் மூலமாக கம்பெனியின் செயற்பாடுகள் தொடர்பாகவும் அத்தேதியில் முடிவுற்ற ஆண்டுக்கான அதன் இலாபம் மற்றும் காசுப்பாய்வு தொடர்பான உண்மையானதும் நியாய மானதுமான அபிப்பிராயமொன்றைத் தருகின்றது.

5. பிற சட்டபூர்வ மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

இந்த நிதிக்கூற்றுகள் 2007 இன் 07 ஆம் இலக்கமுடைய கம்பெனிகள் சட்டத்தின் 151 (2) பிரிவின் அவசியப்பாடுகளுடன் அமைந்தொழுகுகின்றன.

பி. ஆர். த சில்வா அன்ட் கம்பெனி
பட்டயக் கணக்காய்வாளர்கள்,
கொழும்பு - 05.
திகதி : 2011-09-13

லங்கா லொஜிஸ்ரிக்ஸ் அன்ட் ரெக்னொலொஜிஸ் லிமிரெட்

வருமானக்கூற்று

2011 மார்ச் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கானது

	குறிப்புகள்	ரூ. சதம்	2009 / 2010 ரூ.
வருவாய்	(3)	46,091,096.60	40,706,635.21
விற்பனைக் கிரயம்		(12,416,330.54)	(33,977,382.45)
மொத்த இலாபம்		33,674,766.06	6,729,252.76
பிறதொழிற்பாட்டு வருமானம்	(4)	9,046,617.65	12,011,472.20
முந்திய ஆண்டுக்காக அதிகமாக வழங்கிய		6,776,979.55	22,220,361.97
கருத்திட்டங் கிரயம்		49,498,363.26	40,961,086.93
நிர்வாகச் செலவுகள்		(38,494,455.05)	(36,039,754.62)
தொழிற்பாட்டு இலாபம்	(5)	11,003,908.21	4,921,332.31
நிதிக் கிரயம்	(6)	(178,743.49)	(113,844.76)
வரிவிதிப்புக்கு முன் சாதாரண செயற்பாடுகளிலான இலாபம்		10,825,164.72	4,807,487.55
வரிவிதிப்பு		(3,176,218.77)	(2,771,823.00)
வரிவிதிப்புக்கு பின் நிகர இலாபம்		7,648,945.95	2,035,664.55
		==========	=========
பங்கொன்றுக்கான ஈட்டல் - அடிப்படை	(7)	37,311.93	9,930.07
		=======	=========

லங்கா லொஜிஸ்ரிக்ஸ் அன்ட் ரெக்னொலொஜிஸ் லிமிரெட்

2011 மார்ச் 31இல் உள்ளவாறான ஐந்தொகை

	குறிப்புகள்	ரூ. சதம்	31.03.2010 ரூ.
சொத்துக்கள்			
நடைமுறையல்லாச் சொத்துகள்			
ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி	(8)	4,030,340.19	8,433,647.65
		4,030,340.19	8,433,647.65
நடைமுறைச் சொத்துக்கள்			
முதலீடுகள்	(9)	72,883,767.43	72,465,385.04
வர்த்தக மற்றும் பிற வருமதிகள்	(10)	53,291,717.13	59,477,943.12
அறவிடவேண்டிய வருமான வரிக்கணக்கு	(11)	6,330,075.54	5,214,783.49
காசும் காசுக்கு சமமானவையும்	(12)	110,909.02	835,748.08
		132,616,469.12	137,993,859.73
மொத்தச் சொத்துக்கள்		136,646,809.31	146,427,507.37
உரிமைப்பங்குகளும் பொறுப்புகளும்			
மூலதனமும் ஒதுக்கங்களும்			
வெளிப்படுத்திய மூலதனம்	(13)	2,050.00	2,050.00
தொடக்க மூலதனம்	(14)	100,000,000.00	100,000,000.00
திரண்ட இலாபம் / நட்டம்		945,171.42	(6,703,774.53)
மொத்த உரிமைப் பங்கு		100,949,221.42	93,298,295.47
நடைமுறையல்லாப் பொறுப்புகள்			
பணிக்கொடை ஏற்பாடுகள்	(15)	1,870,425.00	1,331,562.50
நடைமுறை பொறுப்புக்கள்			
வர்த்தக மற்றும் பிற சென்மதிகள்	(16)	22,657,326.90	48,053,389.78
இலங்கை வங்கி நடைமுறைக்கணக்கு 5960696		11,171,835.99	3,744,279.63
		33,829,162.89	51,797,669.41
மொத்த உரிமைப் பங்கும் பொறுப்புக்களும்		136,646,809.31	146,427,507.38

இந்த நிதிக்கூற்றுகள் 2007 இன் 07 ஆம் இலக்கமுடைய கம்பெனிகள் சட்டத்தின் அவசியப் பாடுகளுடன் அமைந்தொழுகுகின்றன.

ஒப்பம் / நிதிப் பிரிவுத் தலைமை அதிகாரி

சபை உறுப்பினர்கள் இந்த நிதிக்கூற்றுகளைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பில் பொறுப் புடையவர்கள் ஆவர். சபையின் சார்பாகவும் சபைக்காகவும் ஒப்பமிடப்பட்டது.

	கையொப்பம்	பெயர்
பணிப்பாளர்கள்	1. ஒப்பம்	பி.ஏ.ஐ. சிறிநிமல் பெரேரா
சபை அங்கீகரித்த திகதி	2. ஒப்பம்	ஈ. ஏக்கநாயக்க
	13 செப்ரெம்பர் 2011	

கணக்கீட்டுக் கொள்கைகளும் பக்கம் 05 தொடக்கம் 16 வரையான குறிப்புக்களும் நிதிக்கூற்றுக்களின் இன்றியமையாத ஒரு பகுதியாகும்.

லங்கா லொஜிஸ்ரிக்ஸ் அன்ட் ரெக்னொலொஜிஸ் லிமிரெட்

2011 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான உரிமைப்பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று

	வெளிப்படுத்திய மூலதனம் ரூ. சதம்	தொடக்க மூலதனம் ரூ. சதம்	திரண்ட இலாபம் / நட்டம் ரூ. சதம்	மொத்தம் ரூ. சதம்
2009 மார்ச் 31இல் மீதி	2,050.00	100,000,000.00	(3,000,719.95)	97,001,330.05
கடந்த வருட சீராக்கம் (குறிப்பு 18)	-	-	(5,738,719.13)	(5,738,719.13)
ஆண்டுக்கான இலாபம்	-	-	(2,035,664.55)	(2,035,664.55)
2010 மார்ச் 31 இல் மீதி	2,050.00	100,000,000.00	(6,703,774.53)	93,298,275.49
ஆண்டுக்கான இலாபம்	-	-	7,648,945.95	7,648,945.95
2011 மார்ச் 31 இல் மீதி	2,050.00	100,000,000.00	945,171.42	100,947,221.42

லங்கா லொஜிஸ்ரிக்ஸ் அன்ட் ரெக்னொலொஜிஸ் லிமிரெட்

2011 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான காசுப்பாய்வுக் கூற்று

		2009/2010
	ரூ.	ரூ.
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலான		
<u>காசுப்பாய்வு (பாவிக்கப்பட்ட)</u>		
வருமான வரிவிதிப்புக்கு முந்திய நிகர இலாபம்	10,825,165	4,807,488
<u>சீராக்கல்கள்</u>		
தேய்மானம்	4,478,215	4,444,080
நிதிக் கிரயங்கள்	188,094	113,845
குறித்துரைத்த நன்மைத்திட்டங்களுக்கான ஏற்பாடுகள்	538,863	569,313
கிடைத்த வட்டி	(9,046,618)	(11,946,331)
தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முந்திய தொழிற்பாட்டு இலாபம் / (நட்டம்)	6,983,718	(2,011,605)
வர்த்தக மற்றும் பிற வருமதிகளின் (அதிகரிப்பு)/ வீழ்ச்சி	5,949,976	(1,723,375)
வர்த்தக மற்றும் பிற சென்மதிகளின் அதிகரிப்பு / (வீழ்ச்சி)	(25,396,063)	(37,778,782)
தொழிற்பாடுகளிலிருந்து பிறப்பிக்கப்பட்ட காசு	(12,462,368)	(41,513,762)
செலுத்திய நிதிக் கிரயங்கள்	(188,094)	(113,845)
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலான நிகர காசு/ (பாவிக்கப்பட்டது)	(12,462,368)	(41,627,607)
<u>முதலீட்டுச் செயற்பாடுகளிலான</u>		
<u>நிகர காசுப்பாய்வு / (பாவிக்கப்பட்டது)</u>		
ஆதனம், சாதனம், பொறித்தொகுதி கொள்ளல்	(74,908)	(2,251,089)
கிடைத்த வட்டி	9,046,618	12,011,472
முதலீடுகளைக் கொள்ளல்	(4,473,643)	30,887,567
முதலீட்டுச் செயற்பாடுகளிலான நிகர காசுப்பாய்வு (பாவிக்கப்பட்டது)	4,498,066	40,647,950
காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் நிகரஅதிகரிப்பு/ (வீழ்ச்சி)	(8,152,395)	(1,044,798)
ஆண்டின் தொடக்கத்தில் காசும் காசுக்கு சமமானவையும்	(2,908,532)	(1,863,734)
ஆண்டிறுதியில் காசும் காசுக்கு சமமானவையும்	(11,060,927)	(2,908,532)
<u>காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் பகுப்பாய்வு</u>		
வங்கியிலுள்ள காசு – மேலதிகப் பற்று	(11,171,836)	(3,774,280)
வங்யியிலுள்ள காசு சேமிப்பு வங்கி கணக்கு 5960160	66,659	845,748
சம்பத் வங்கி பீஎல்சீ	24,250	-
கையிலுள்ள காசு	20,000	20,000
	(11,060,927)	(2,908,532)

லங்கா லொஜிஸ்ரிக்ஸ் அன்ட் ரெக்னொலொஜிஸ் லிமிரெட்

நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள்
2011 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கானது

1. தாபனம்சார் தகவல்கள்

1.1 பொதுவானவை

லங்கா லொஜிஸ்ரிக்ஸ் அன்ட் ரெக்னொலொஜிஸ் லிமிரெட் கம்பெனி ('கம்பெனி') இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட மற்றும் நிரந்தர வதிவு கொண்ட வரையறுக்கப் பட்ட பொறுப்புடைய கம்பெனியாகும். கம்பெனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் கொழும்பு - 7, பௌத்தாலோக மாவத்த, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் 4 - 205 இல் தாபிக்கப் பட்டுள்ளதோடு பிரதான தொழில்முயற்சி நிலையமும் அங்கேயே அமைந்துள்ளது.

1.2 பிரதான செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாடுகளின் தன்மை

தரைப்படை, கடற்படை, விமானப்படை மற்றும் பொலீசுக்கான உபகரணங் களையும் சேவைகளையும் வழங்குவதே ஆண்டில் கம்பெனியின் பிரதான செயற்பாடாக அமைந்தது.

1.3 பக்கம் (5) தொடக்கம் (16) வரையில் உள்ள நிதிக்கூற்றுகள் பற்றிய குறிப்புகள் நிதிக்கூற்றுக்களின் இன்றியமையாத பகுதியாகும்.

1.4 பதவியணி எண்ணிக்கை

ஆண்டிறுதியில் பதவியணி எண்ணிக்கை 18 ஆக விளங்கியது.

2. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

2.1 பொதுவான கொள்கைகள்

2.1.1 தயாரித்தலுக்கான அடிப்படை

2011 மார்ச் 31 ஆம் தேதியில் கம்பெனியின் ஐந்தொகை, வருமானக் கூற்று, உரிமைப்பங்கிலான மாற்றம் மற்றும் காசுப் பாய்வுக்கூற்றுடன் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் (நிதிக்கூற்றுக்கள்) இலங்கையின் சம்பந்தப் பட்ட கணக்கீட்டு நியமங்களுடன் இயலுமான எல்லாவிதத்திலும் அமைந் தொழுகுகின்றன.

இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்நிதிக்கூற்றுகள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

நடப்புத்தொழில்முயற்சி என்றவகையில் இடையறாமல் நிலவுவதற்கு கம்பெனி கொண்டுள்ள இயலுமை பற்றி பணிப்பாளர் சபை மதிப்பீடொன் றைச் செய்துள்ளதோடு கலைக்கவோ வர்த்தகச் செயற்பாடுகளை நிறுத்தவோ அவர்கள் கருதுவதில்லை.

2.1.2 ஒப்பீட்டு ரீதியான தகவல்கள்

கம்பெனியால் கணக்கீட்டுக்கொள்கைகள் தொடர்ச்சியாக பிரதியீடு செய்யப் பட்டுள்ளன.

2.1.3 வெளிநாட்டுப் புழக்கத்திலுள்ள பணக்கொடுக்கல் - வாங்கல்

அனைத்துவிதமான செலாவணிக் கொடுக்கல் - வாங்கல்களும் கொடுக்கல் - வாங்கலில் ஈடுபட்ட திகதியுடன் தொடர்புடைய செலாவணி விகிதத்தில் பதியப்படுகின்ற பண அலகான இலங்கை ரூபாவாக மாற்றப்படுகின்றது. வெளிநாட்டு நாணயங்களில் படிநிலைப் பெறுமதி செய்யப்பட்டுள்ள பணச் சொத்துக்களும் பெறுமதிகளும் ஆண்டிறுதியில் நிலவுகின்ற அந்நிய செலாவணி விகிதத்தைப் பயன்படுத்தி இலங்கை ரூபாவில் இணையான பணத்தொகைக்கு மாற்றப்படுகின்றது. காசு அல்லாத சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பெறுமதி நிர்ணயிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் செலாவணி விகிதம் பிரயோகிக்கப்பட்டு மாற்றப்படும். அதன் பெறுபேறாக தோன்றுகின்ற இலாப நட்டங்களுக்காக வருமானக்கூற்றில் காரணங்கள் காட்டப்பட்டுள்ளன.

2.1.4 வரிவிதிப்பு

(அ) நடைமுறை வரி

வருமானவரிக்கான ஏற்பாடுகள் நிதிக்கூற்றுக்களில் அறிவிக்கப்படவுள்ள வாறும் உண்ணாட்டரசிறை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரமும் கணிப் பிடப்பட்டுள்ள வருமான மற்றும் செலவின அம்சங்களையே அடிப் படையாகக் கொண்டுள்ளது.

2.1.5 கடனெடுத்தல் கிரயம்

கடனெடுத்தல் கிரயமானது அவை உறப்பட்ட காலப்பகுதிக்கான செலவின மாக ஏற்றுக்கொள்ளப்படும்.

2.1.6 பிற்போடப்பட்ட செலவினங்கள்

ஒரு நிதியாண்டுக்கு மேலாக நன்மை அல்லது செயல்விளைவு கொண்டதாக கருதப்படுகின்ற செலவுகள் பிற்போடப்பட்ட செலவினங்களாக வகைப்படுத்தப்

பட்டுள்ளன. அத்தகைய செலவினங்கள் எளிய நேர்கோட்டு அடிப்படையில் அது ஏற்புடையதாகும் காலப்பகுதிக்காக வெட்டிவிடப்படும்.

2.2 சொத்துக்களின் மதிப்பீடும் அவற்றை அளவிடும் அடிப்படைகளும்

2.2.1 வர்த்தக மற்றும் பிற வருமதிகள்

அறடவிடமுடியாத மற்றும் ஐயக்கடனுக்கான ஏற்பாடுகளின் மொத்த அளவு தேறக்கூடியதென மதிப்பீடு செய்யப்பட்டுள்ள அளவுகளில் வர்த்தக வருமதிகள் பதியப்பட்டுள்ளன.

2.2.2 காசும் காசுக்கு சமமானவையும்

காசும் காசுக்கு சமமானவையும் அறியப்பட்ட பண அளவுகளுக்கு இலகுவில் மாற்றக்கூடிய மற்றும் பெறுமதி மாற்றத்தில் கருத்திற் கொள்ளப்பட இயலாத இடர்வரவுச் சாத்தியமுள்ள கையிலுள்ள காசு, அழைப்பு வைப்புக்கள் மற்றும் குறுங்கால உயர்திரவத்தன்மை கொண்ட முதலீடுகளாக பொருள் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

காசுப் பாய்வுக் கூற்றின் கருமத்திற்காக காசு மற்றும் காசுக்கு சமமானவை கையிலுள்ள பணத்தையும் செலுத்தாத வங்கி மேலதிகப் பற்றுக்களிலிருந்து தேறிய வங்கி வைப்புத் தொகைகளையும் உள்ளடக்குகின்றது. குறுங்கால முதிர்ச்சி கொண்ட முதலீடுகள் அதாவது கொள்ளப்பட்ட திகதியில் இருந்து மூன்று மாதங்கள் அல்லது அதைவிடக் குறைந்த முதலீடுகளும் காசுக்கு சமமானவையாகக் கருதப்படும்.

2.2.3 ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி

(அ) **கிரயம்**

ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதிகள் திரண்ட தேய்மானம் கழிக்கப்பட்டு கிரயத்திலேயே அறிக்கையிடப்பட்டுள்ளது.

(ஆ) **கிரயமும் மதிப்பீடும்**

அனைத்துவிதமான ஆதன, சாதனம் மற்றும் உபகரண வகையினங்கள் முதலில் கிரயத்திற்கிணங்க குறிக்கப்படும். ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி வகையினங்கள் பின்னர் மீள் மதிப்பீட்டின் போது அத்தகைய உடைமைகளின் ஒட்டுமொத்த வகுப்பும் மீள் மதிப்பீடு செய்யப்படும். ஐந்தொகை தேதியன்று அவற்றின் கொண்டு செல்லும் பணப்பெறுமதிகள் தேதியன்று நியாயமான பெறுமதியில் பொருண்மை யில் மாறாதிருப்பதற்காக ஆவண செய்யும் பொருட்டு போதியளவு முறைசார்ந்ததாக மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்படும். கிரயத்திற்கிணங்க

பெறுமதி மதிப்பிடப்பட்ட சொத்தாக முதலில் ஏற்றுக்கொண்ட பின்னர் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதிகள் அவற்றின் அடுத்தடுத்த தேய்மானம் கழிக்கப்பட்டு மீள் மதிப்பீடு செய்த பணத்தொகைக்கேற்ப பேணி வரப்படும். ஏனைய அனைத்துவிதமான பிரதான ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதிகள் தேய்மானம் கழிக்கப்பட்டு வரலாற்றுக் கிரய அடிப்படையில் காட்டப்படுகின்றது.

(இ) மீள்நிறுவுதல் கிரயம்

முதன்முதலில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள செயலாற்றுகை தர நியமத்தில் எதிர்பார்ந்த வருங்கால பொருளாதார நன்மைகளை இயல்புநிலைக்கு வரச் செய்வித்தல் அல்லது பேணிவரும் பொருட்டு ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதியைத் திருத்தியமைத்தல் அல்லது பராமரிக்கும் பொருட்டு உறப்பட்ட செலவுகள் அவ்விதமாக செலவிடப்பட்ட தருணத்தில் ஒரு செலவினமாக ஏற்றுக்கொள்ளப்படும்.

(ஈ) தேய்மானம்

தேய்மான ஏற்பாடுகள் அனைத்துவிதமான ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதிகளின் கிரயம் அல்லது பெறுமதியின் பேரில் எளிமை யான நேர்கோட்டின் அடிப்படையிலேயே கணிப்பிடப்பட்டுள்ளன.

பிரயோகிக்கப்பட்ட பிரதானமாக வருடாந்த வீதங்களாவன,

தளபாடங்களும் பொருத்திகளும்	20%
அலுவலக சாதனங்கள்	20%
மோட்டார் வாகனங்கள்	25%
தகவல் தொழில்நுட்ப சாதனங்களும் துணைச்சாதனங்களும்	25%
உள்ளக அலங்கரிப்பு	50 %

திருத்திய இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 18 இன்படி ஆதனம், சாதனம், பொறித்தொகுதிகளை பாவனைக்கு எடுக்கத்தக்கதாக உள்ள காலப்பகுதிக்கமையவே தேய்மான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

2.2.4 குத்தகை

(அ) நிதிக் குத்தகை – கம்பெனி குத்தகைக்கு எடுக்கும் போது

குத்தகை வகையினங்களின் உரித்துவத்துடன் இடைநேர்விளைவான அனைத்துவிதமான அபாயநேர்வுகளும் நன்மைகளும் கணிசமான வகையில் கம்பெனிக்கு செயல்விளைவு கொண்டதாக கையளிப்பட்ட

நிதிக்குத்தகைகள் மீதான ஆதனம், சாதனம் மற்றும் பொறித் தொகுதிகள் நிதிசார் பெறுமதிக்கிணங்க மூலதனமயமாக்கப்பட்டு ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதியாக வெளிப்படுத்தப்பட்டு மேற்படி குத்தகை சொத்தின் பாவனையில் இருந்து நன்மைபெற கம்பெனி எதிர்பார்த்துள்ள காலப்பகுதிக்காக தேய்மானம் மேற் கொள்ளப்படும்.

குத்தகை வழங்குநருக்கு செலுத்தவேண்டிய நேரொத்த ஆரம்பத்தொகை பொறுப்பாக காட்டப்பட்டுள்ளது. பொறுப்பின் எஞ்சியதாக நிலவுகின்ற மீதியின் அடிப்படையில் நிலையான வட்டி வீதமொன்றை உருவாக்கிக் கொள்ளக்கூடியதாக இத்தகைய செலுத்துநர் நிதிசார் கட்டணகங்கள் மற்றும் குத்தகைப் பொறுப்பின் வீழ்ச்சிக்கும் இடையில் பிரித் தொகுக்கப்படும். ஒவ்வொரு நிதியாண்டுக்குமாக ஏற்புடையதாகின்ற வாடகை கடப்பாடுகளின் வட்டியானது குத்தகைக் காலத்தில் வருமானக் கூற்றுக்கு அறவிடப்படும்.

(ஆ) நெறிப்படுத்தல் குத்தகை

குத்தகை வழங்குநர் குத்தகைக்காலம் பூராவிலும் உரித்துவத்தின் அபாயநேர்வு மற்றும் கணிசமான நிலையில் செயல்விளைவு கொண்டதாக தடுத்து வைக்கப்படுகின்ற குத்தகைகள் நெறிப்படுத்தல் குத்தகைகளை வகைப்படுத்தப்படும். நெறிப்படுத்தல் குத்தகையின் கீழ் செலுத்தப்படுகின்ற வாடகைப் பணத்தொகைகள் வருமானக் கூற்றில் செலவினமாக ஏற்றுக்கொள்ளப்படும்.

2.2.5 முதலீடுகள்

(அ) நடைமுறை முதலீடுகள்

நடைமுறை முதலீடுகள் கிரயத்தைப் பார்க்கிலும் குறைவாக சந்தைப் பெறுமதியில் காட்டப்படும்.

முதலீடொன்றின் கிரயமென்பது தரகர் கட்டணம், சுங்கத்தீர்வை மற்றும் வங்கிக்கட்டணத்தை உள்ளிட்ட மீள்பெறுமதியிடலுக்கான கிரயமாகும்.

(ஆ) நீண்டகால முதலீடுகள்

நீண்டகால முதலீடுகள் கிரயம் அல்லது மதிப்பீடு அல்லது தோற்றப்பாடு அடிப்படையில் கிரயம் மற்றும் சந்தைப் பெறுமதிக்கு குறைவாக காட்டப் படுகின்றது.

முதலீடொன்றின் கிரயமென்பது தரகர் கட்டணம், சுங்கத்தீர்வை மற்றும் வங்கிக்கட்டணத்தை உள்ளிட்ட மீள்பெறுமதியிடலுக்கான கிரயமாகும்.

2.3 பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்

2.3.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது அறியப்பட்ட அனைத்துப் பொறுப்புக் களுக்கும் காரணங்கள் காட்டப்பட்டுள்ளன.

2.3.2 ஓய்வூதிய நன்மைக் கடப்பாடுகள்

(அ) குறித்துரைத்த நன்மைத்திட்டம் – பணிக்கொடை

பணிக்கொடை என்பது குறித்துரைக்கப்பட்ட நன்மைத்திட்டமாகும். இப்பொறுப்பினை ஈடேற்றுவதற்காக முதலாவது சேவை வருடத்தில் தொடங்கி பூர்த்தி செய்துள்ள சேவையாற்றிய ஒவ்வொரு வருடத்திற் காகவும் அனைத்து ஊழியர்களுக்கும் தொடக்கத்தில் இருந்து இறுதி மாதத்தின் அரைமாத சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு ஐந் தொகையில் ஒதுக்கீடு முன்கொண்டு செல்லப்படும்.

பணிக்கொடைப் பொறுப்பானது வெளிவாரி நிதி வழங்குவதோ அல்லது அட்டுறு அடிப்படையில் மதிப்பீடு செய்வதோ அல்ல. இந்த வகையினம் ஐந்தொகையில் ஏற்பாடுகள் மற்றும் பிற பொறுப்புக்களின் கீழ் வகைப் படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) குறித்துரைத்த நன்மைத்திட்டம் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்

சம்பந்தப்பட்ட நியதிச்சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் ஊழியர்கள் ஊழியர் சேமலாப நிதியத்தின் உதவுதொகைக்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் தகைமை பெறுவர்.

2.4 கொடைகளும் மானியங்களும்

கொடை / மானியம் கிடைப்பதற்கான நியாயமான உத்தரவாதம் இருப்பின் மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்து நிபந்தனைகள் ஏதும் இருப்பின் அவற்றுக்கு அமைவாக செயலாற்றுவதாயின் கொடைகளும் மானியங்களும் அவற்றின் நியாயமான பெறுமதியின் பேரின் ஏற்றுக்கொள்ளப்படும். கொடை அல்லது மானியம் செலவு வகையினமொன்றுடன் ஏற்புடையதாக அமையுமிடத்து, முறையான அடிப்படையில் ஒப்புறுதி செய்ய எதிர்பார்க்கப்படுகின்ற கிரயத்திற்கு அவற்றைச் சீராக்க அவசியமான காலப்பகுதி பூராவிலும் அது வருமானமாக ஏற்றுக்கொள்ளப்படும்.

நியாயமான பெறுமதி கொண்ட பணமல்லாத கொடைகளை உள்ளிட்ட சொத்துக்களுடன் தொடர்புடைய கொடைகளும் மானியங்களும் சொத்துக்களின் கொண்டு செல்லும் பெறுமதிக்கு வரும்போது கழிக்கப்படும்.

2.5 வருமானக் கூற்றுக்கள்

2.5.1 வருமானத்தை ஏற்றுக்கொள்ளல்

பொருளாதார நன்மைகள் கம்பெனிக்கு பாயக்கூடிய வாய்ப்புள்ள அளவுக்கும் உறப்பட்ட அல்லது உறப்படவுள்ள வருமானத்தைச் சார்ந்த கிரயத்தை நம்பகத்தன்மை மிக்கவகையில் அளவிடக்கூடிய அளவில் வருமானம் ஏற்றுக் கொள்ளப்படும். வருமானமானது வர்த்தகக் கழிவு மற்றும் விற்பனை வரிகளில் இருந்து தேறியதாகக் கிடைத்த அல்லது கிடைக்கவுள்ள கைமாறின் நியாயமான பெறுமதிக்கே அளவிடப்படும். வருமான ஏற்றுக் கொள்ளல் பணிக்காக கீழே காட்டப்பட்ட திட்டவட்டமான அளவுகோல்கள் பிரயோகிக்கப்படும்.

(அ) பண்ட விற்பனை

உரித்துவம் மற்றும் பொதுவாக தொடர்புடைய அளவுக்கு தொடர்ச்சி யான முகாமைத்துவ இடையீட்டை அல்லது விற்கப்பட்ட பண்டங்கள் தொடர்பான செயல்விளைவுமிக்க கட்டுப்பாட்டினை கம்பெனி தக்க வைத்துக் கொள்ளாத விடத்தும் பண்டங்களின் உரித்து வத்தின் கணிசமான அபாயநேர்வு மற்றும் அளிப்புப் பெறுகின்ற கொள்வன வாளருக்கு கையளிக்கப்பட்டுள்ளவிடத்து பண்டவிற்பனையிலிருந்து கிடைக்கின்ற வருமானம் ஏற்றுக்கொள்ளப்படும்.

(ஆ) சேவை வழங்கல்

சேவைகளை வழங்கலிலிருந்து கிடைக்கின்ற வருமானம் மேற்படி சேவைகளை வழங்கிய அல்லது ஈடேற்றிய கணக்கீட்டுக் காலப் பகுதிக்குள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(இ) வட்டி

வட்டி வருமானம் அட்டுறு அடிப்படையில் ஏற்கப்படும்.

(ஈ) வாடகை வருமானம்

வாடகை வருமானம் அட்டுறு அடிப்படையில் ஏற்கப்படும்.

(உ) ஏனைய வருமானங்கள் அட்டுறு அடிப்படையில் ஏற்கப்படும்.

ஆதனம். சாதனம், பொறித்தொகுதி, மற்றும் முதலீடுகளை உள்ளிட்ட நடைமுறையல்லாச் சொத்துக்களை கையாளளின் பேரிலான தேறிய இலாபம் மற்றும் நட்டம், கையாளரின் பேரிலான பிறப்பிக்கப்பட்ட சொத்துக்களின் கொண்டுசெல்லல் பணஅளவு மற்றும் இணையான விற்பனைச் செலவுகளிலிருந்து கழித்தபின்னர் வருமானக் கூற்றில் காட்டப்பட்டுள்ளது. (மீள் பெறுமதியிடப்பட்ட ஆதனம், சாதனம் மற்றும் உபகரணங்களைக் கையாளும்போது, சொத்துக்களுடன் தொடர்புடைய மீள்பெறுமதி ஒதுக்கத்தில் எஞ்சியுள்ள பணஅளவு நேரடியாகவெ திரண்ட இலாபத்திற்கு மாற்றப்படும்.)

2.5.2 செலவுகளை ஏற்றல்

(அ) வருமானக்கூற்றில் செலவுகள் ஏற்றுக்கொண்ட கிரயம் மற்றும் திட்டவட்டமான வருமான வகையினங்களின் ஈட்டல்களுக்கிடையிலான நேரடி தொடர்பின் அடிப்படையிலேயே ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. செயல்விளைவு மிக்கதாக தொழில்முயற்சியை பேணிவரவும் ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதியைப் பேணி வரவும் ஏற்கப்பட்ட அனைத்துச் செலவுகளும் ஆண்டுக்கான இலாபத்தை நோக்கி வரும்போது வருமானத்தில் அறிவிடப்பட்டுள்ளது.

(ஆ) வருமானக்கூற்றினைச் சமர்ப்பிக்கும் பணிக்கான பணிப்பாளர் சபையின் கருத்தாக அமைவது ‘செலவுச் செயற்பாடு’ திட்டத்தில் கம்பெனியின் செயலாற்றுகையின் அடிப்படை அம்சங்கள் நியாயமாக அமைகின்ற தென்பதாகும். எனவே மேற்படி சமர்ப்பித்தல் வழிமுறை பிரயோகிக்கப் பட்டுள்ளன.

லங்கா லொஜிஸ்ரிக்ஸ் அன்ட் ரெக்னொலொஜிஸ் லிமிரெட்

2011 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்

		2009/2010
	ரூ. சதம்	ரூ. சதம்
(3) வருவாய்		
சீஆர்டி கருத்திட்ட சேவைக்கட்டணம்	13,213,868.44	40,206,635.21
நிர்வாகச் செலவினம்	31,894,868.87	
பதிவுக் கட்டணம் - வழங்கலாளர்கள்	982,401.29	
	46,091,096.60	40,206,635.21
(4) பிற தொழிற்பாட்டு வருமானம்		
வட்டி வருமானம் - நிலையான வைப்புகள்	8,666,011.72	11,946,331.22
வட்டி வருமானம் - சேமிப்புகள்	349,085.93	65,140.50
சில்லறை வருமானம்	31,520.00	-
	9,046,617.00	12,011,472.20
(5) பின்வருவனவற்றையும் உள்ளிட்டதாக எல்லாச் செலவுகளையும் அறவிட்ட பின்னர் வெளிப்படுத்திய <u>தொழிற்பாட்டு இலாபம்</u>		
சம்பளம்	16,636,501.68	15,475,291.66
கணக்காய்வாளர் ஊதியம் (கட்டணமும் செலவுகளும்)	107,100.00	95,000.00
பணியாளர் கிரயம் (பின்வரும் இளைப்பாற்றுத்திட்டக் கிரய ங்களையும் உள்ளட்டதாக) குறித்துரைத்த நன்மைத்திட்டக் கிரயம் - பணிக்கொடை	538,862.50	569,312.50
குறித்துரைத்த பங்களிப்புத்திட்டக் கிரயம் ஊ. சே. நி மற்றும் ஊ. ந. நி	2,503,338.25	2,321,293.75
(6) நிதிக் கிரயம்		
வங்கிக் கட்டணங்கள்	13,810.00	12,260.00
பற்றுவரி	127,676.86	54,563.53
மேலதிகப் பற்று வட்டி	37,256.63	47,021.23
	178,743.49	113,844.76

(7) <u>பங்கொன்றுக்கான ஈட்டல்</u>

பங்கொன்றிற்கான அடிப்படை வருமானம் அவ்வாண்டின் சாதாரண பங்குதாரர்களின் தேறிய இலாபத்தை ஆண்டில் நிலுவையாக உள்ள சாதாரண பங்குகளின் நிறையிடப்பட்ட சராசரி எண்ணிக்கையினால் பிரிப்பதன் மூலம் கணிக்கப்படுகின்றது.

		2009/ 2010
சாதாரண பங்குகளுக்கு உடைமையாக்கக்கூடிய நிகர இலாபம் (ரூபா)	7,648,945.95	2,035,664.55
ஆண்டில் நிலுவையாக உள்ள பங்குகளின் நிறையிடப்பட்ட சராசரி எண்ணிக்கை	205	205
பங்கொன்றுக்கான ஈட்டல் (ரூபா)	37,311.93	9,930.07

லங்கா லொஜிஸ்ரிக்ஸ் அன்ட் ரெக்னொலொஜிஸ் லிமிரெட்

2011 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்

(8) ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி

(8.1) மொத்த முன்கொண்டு சென்ற தொகைகள்	2008.04.01 இல் உள்ளவாறான மீதி ரூ. சதம்	சேர்த்தவை மாற்றல் ரூ. சதம்	கையாளல் / மாற்றல் ரூ. சதம்	2009.03.31 இல் உள்ளவாறான மீதி ரூ. சதம்
மோட்டார் வாகனம்	8,778,061.46	-	-	8,778,061.46
உள்ளக அரங்க அமைப்பு	4,321,487.05	33,597.80	-	4,355,084,85
கணனி, துணைச் சாதனங்கள்	3,204,818.39	-	-	3,204,818.39
தளபாடம், பொருத்திகள்	2,321,327.85	30,275.30	-	2,351,603.15
அலுவலக சாதனங்கள்	1,795,774.31	11,034.68	-	1,806,808.99
	20,421,469.06	74,907.78	-	20,496,376.84

(8.2) தேய்மானம்	2008.04.01 இல் திரண்ட தேய்மானம் ரூ. சதம்	ஆண்டுக்கான தேய்மானம் ரூ. சதம்	கையாளல் மாற்றல்	2009.03.31 இல் திரண்ட தேய்மானம் ரூ. சதம்
மோட்டார் வாகனம்	4,387,011.40	2,193,929.00	-	6,580,940.40
உள்ளக அரங்க அமைப்பு	3,618,180.84	708,000.70	-	4,326,181.54
கணனி, துணைச் சாதனங்கள்	1,947,659.20	744,970.81	-	2,692,630.01
தளபாடம், பொருத்திகள்	1,307,003.78	511,517.84	-	1,818,521.62
அலுவலக சாதனங்கள்	727,966.19	319,796.89	-	1,047,763.08
	11,987,821.41	4,478,215.24	-	16,466,036.65

(8.3) நிகர புத்தகப் பெறுமதிகள்	ரூ. சதம்	ரூ. சதம்
கிரயத்தில்		
மொ.மு.கொ. செ. அளவு	4,030,340.19	8,433,647.65
ஆதனம்,சாதனம், பொறித்தொகுதி	4,030,340.19	8,433,647.65

லங்கா லொஜிஸ்ரிக்ஸ் அன்ட் ரெக்னொலொஜிஸ் லிமிரெட்

2011 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்

		2009/2010
	ரூ. சதம்	ரூ.
(9) முதலீடுகள்		
திறைசேரி உண்டியல்களிலான முதலீடுகள்	24,999,999.63	28,617,926.66
நிலையான வைப்புக்களிலான முதலீடுகள்	47,883,767.80	43,847,458.38
	72,883,767.43	72,465,385.04
(10) வர்த்தக மற்றும் பிற வருமதிகள்		
வர்த்தக வருமதிகள்	18,559,632.72	36,377,060.68
முற்பணமும் முற்கொடுப்பனவுகளும்	34,707,068.15	23,100,882.41
பிற வருமதிகள்	25,016.26	-
	53,291,717.13	59,477,943.12
(11) வருமதியான வருமானவரி		
ஆண்டின் தொடக்கத்தில் மீதி	5,214,783.49	5,092,643.14
ஆண்டுக்கான ஏற்பாடு	(3,176,218.77)	(2,771,823.00)
	2,038,564.72	2,320,820.14
கூட்டுக : செலுத்தியவை	4,291,510.82	2,893,963.35
ஆண்டிறுதியில் மீதி	6,330,075.54	5,214,783.49
(12) காசும் காசுக்கு சமமானவையும்		
இலங்கை வங்கி	66,659.03	815,748.08
சம்பத் வங்கி பீஎல்சீ	24,250.00	-
கையிலுள்ள காசு	19,999.99	20,000.00
	110,909.02	835,748.08
(13) வெளிப்படுத்திய மூலதனம்		
வெளிப்படுத்திய மூலதனம்	2,050.00	2,050.00
(14) தொடக்க மூலதனம்		
தொடக்க மூலதனம்	100,000,000.00	100,000,000

குறிப்பு :தொடக்க மூலதனம் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் அமைச்சினால் பங்களிப்புச் செய்யப்பட்டது.

(15) <u>பணிக்கொடைக்கான ஏற்பாடுகள்</u>

தொடக்க மீதி	1,133,562.50	762,250.00
ஆண்டுக்கான ஏற்பாடு	538,862.50	569,312.50
இறுதி மீதி	1,870,425.00	1,331,562.50

(16) <u>வர்த்தக மற்றும் பிற செலுமதிகள்</u>

வர்த்தக கடன்கொடுநர்	14,871,779.60	42,756,065.50
பிற கடன்கொடுநர் மற்றும் அட்டுறு செலவினங்கள்	7,785,547.30	5,297,324.28
	22,657,326.90	48,053,389.78